

# தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

## சமூக வாழ்வில் பிரதிபலன் நோக்கா அன்பு

### தொடக்கச் செபம்

அளவில்லாத நன்மைத்தனமும்,
இரக்கமும் நிறைந்த ஓ அன்பு தேவனே!
தவம், செபம், தர்மம் வழியாக எமது பாவ வாழ்விலிருந்து
விடுதலை பெற அருள் செய்தவரே! எங்களது நொறுங்கிய
உள்ளத்தைக் கண்ணோக்கிப் பாரும். உமக்கு விரோதமாகப்
பாவம் செய்து, உம்மை விட்டு அகன்ற எங்களை உமது
இரக்கத்தால் கரம் பற்றித் தூக்கி விடும். உமது திருமகன்
இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
ஆமென்.

# தவக்காலம் 3ம் ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு A (23-03-2014)

## திருப்பலி முன்னுரை

இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்காவிழாவிற்கு அணியமாகும் வகையில் தவக்காலப் பக்தி முயற்சிகளில் பங்கேற்று இன்று சிறப்பாக தவக்கால மூன்றாம் ஞாயிறு திருப்பலி வழிபாட்டில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் பெரியோர்களே! வருங்காலத் திரு அவையின் கருவாகிய இளையோர்களே! சிறுவர், சிறுமிகளே உங்கள் அனைவருக்கும் தவக்காலம் தரும் புதிய பாஸ்காப் பெருவாழ்வு கிடைக்க அன்புடன் வாழ்த்துகிறேன்.

தவக்காலத்தின் மூன்றாம் வாரத்திலிருக்கிறோம். முதல் வாரத்தில் பாலை வனத்திற்கு அழைத்துச் சென்ற இயேசு கடந்த வாரம் மலைக்கு அழைத்துச்சென்றார். இந்த வாரம் தண்ணீர் உள்ள ஒரு கிணற்றுக்கு நம்மை அழைக்கிறார். மனிதர்களாகிய நாம் தனி மரம்போல் வாழ்வதில்லை. பிறரோடு ஒன்றிணைந்து ஒரு சமுதாயமாகவே வாழ்ந்திடமுடியும். அதிலும் கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவாசத்திலும், அன்பிலும் இணைந்து: இயேசுவுக்குள் இணைந்து வாழும் புனித திருச்சபை என்னும் இறை சமூகமாகத் திகழ்கின்றோம். நமது சமுதாய வாழ்வில் உண்மையான அன்புக்காக, ஆதரவுக்காக ஏங்கித் தவிக்கும் நம் சகோதர சகோதரிகளில் கிறிஸ்து இயேசுவை இனங் கண்டு கொள்வோம். பிறரைப் புரிந்து ஏற்றுக் கொள்ளுகின்ற நல்ல மனம் கொண்டு, அன்பு செய்து ஆதரவு தந்து இயேசுவின் தாகம் தீர்க்கின்ற இறைமக்களாக வாழ்ந்திட இன்றைய திருப்பலியில் இயேசுவுடன் இணைவோம்.



# இறைவார்த்தை

## முதலாம் வாசகம்:
## விடுதலைப் பயணம் 17:3-7

கடவுள் நம்மோடு இருக்கிறாரா? இல்லையா?
பாலை வனத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்று இஸ்ராயேல் மக்கள் புகார் எழுப்புகிறார்கள். இதற்கு முன்பாக வி.ப.15ல் தண்ணீர் கசப்பாக இருக்கிறது என்றனர். ஆண்டவர் மோசேயிடம் ஒரு மரத்துண்டை அதில் போடச்சொல்ல அந்த நீர் இனிமையாக மாறுகிறது. இப்போது தண்ணீர் இல்லை. அவர்கள் இப்பாலை வனத்தில் இருப்பதற்கான காரணமே கடவுள் விடுதலைக்கான அவர்களின் அழுகுரலைக் கேட்டு, தனது அற்புதத்தால் எகிப்திலிருந்து அவர்களை மீட்டதால் தான். ஆனால் இப்போது கடவுளின் மனப்பான்மைக்கே கேள்வி. மீண்டும் கடவும் தனது மக்கள் மேல் கொண்ட அன்பால் பாறையிலிருந்து தண்ணிரைத் தருகிறார்.

## இரண்டாம் வாசகம்:
## உரோமையர் 5:1-2, 5-8

கடவுள் நம்மை அன்பு செய்கிறார் என்பது எப்படி நிரூபிக்கப்படுகிறது?
தூய பவுல் உரோமையருக்கு எழுதிய கடிதத்தில், இயேசுவின் தியாகப்பலியை ஒரு கொடையாகப் பெற்றுக் கொண்டோம். கடவுளின் அன்பு நமது இதயத்தில் ஊற்றப்படுகிறது என்பது நாம் விசுவசிக்கின்ற பேருண்மை. பாவிகளாகிய நமக்காக இயேசு இறந்தார் என்பதுதான் கடவுளின் மாபெரும் அன்பு.

## நற்செய்தி:
## யோவான் 4:5-42

அவரே உலக மீட்பர் என்பது உண்மை.
சமாரியப் பெண், தான் யூதமதத் தலைவரென எண்ணிய ஒருவரோடு ஏற்பட்ட உரையாடலில் மெசியாவைச் சந்தித்திருக்கிறாள். முதல் வாசகத்தில் கூறியது போலவே இங்கும் தண்ணீர் பற்றிப் பேசப்படுகிறது. இது வாழ்வை வளமாக்க, நிலை வாழ்வைப் பெறுவதற்கான அடையாளமாகக் கொடுக்கப்படுகிறது. இயேசு மீட்பு யூதரிடமிருந்து வருகிறது என்றும் அதற்கான நேரம் இப்போதே வந்துவிட்டது என்றும் கூறுகிறார். அதாவது விசுவாசிகள் கடவுளை ஆவியிலும் உண்மையிலும் ஆராதிப்பர் என்கிறார். சமாரியப் பெண்ணிடம் நான்தான் அவர் என்று சொன்னபோது அவள் நம்பிக்கை கொள்கிறாள். அந்த உண்மைக்கு சாட்சி பகரவே அவள் நகருக்குள் ஓடுகிறாள்.

## முதல் வாசகம்:

இதோ நான் அங்கே ஓரேபில் உள்ள பாறையில் உனக்குமுன் நிற்பேன். நீ பாறையை அடி மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்" என்றார்.

விடுதலைப்பயண நூல் 17:3-7

அங்குத் தண்ணீரின்றித் தவித்ததால் மக்கள் மோசேயை எதிர்த்து முறுமுறுத்து, "நீர் எகிப்திலிருந்து எங்களை வெளியேறச் செய்தது எங்களையும், எங்கள் பிள்ளைகளையும் கால்நடைகளையும் தாகத்தால் சாகடிக்கவா?" என்று கேட்டனர். மோசே ஆண்டவரிடம், "இந்த மக்களோடு நான் என்ன செய்வேன்? இன்னும் கொஞ்சம் போனால் என்மேல் கல்லெறிவார்களே!" என்று கதறினார். ஆண்டவர் மோசேயிடம், "இஸ்ரயேல் தலைவர்கள் சிலரை உன்னோடு அழைத்துக்கொண்டு மக்கள் முன் செல் நைல்நதியை அடித்த உன் கோலையும் கையில் எடுத்துக் கொண்டு போ. இதோ நான் அங்கே ஓரேபில் உள்ள பாறையில் உனக்குமுன் நிற்பேன். நீ பாறையை அடி மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்" என்றார். இஸ்ரயேல் தலைவர்கள் காண மோசே அவ்வாறே செய்தார். இஸ்ரயேல் மக்கள் அங்கு வாதாடியதாலும் ஆண்டவர் தம்மோடு இருக்கிறாரா இல்லையா என்று சோதித்ததாலும், அவ்விடம் "மாசா" என்றும் "மெரிபா" என்றும் பெயரிட்டழைக்கப்பட்டது.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**

**- இறைவா உமக்கு நன்றி**

## பதிலுரைப் பாடல்

பல்லவி: "உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர், ஆண்டவர் குரலைக் கேட்டிடுவீர்;"

திருப்பாடல் 95:1-2, 6-7, 7-9

வாருங்கள் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள் நமது மீட்பின் பாறையைப் போற்றி ஆர்ப்பரியுங்கள். நன்றியுடன் அவர் திருமுன் செல்வோம் புகழ்ப் பாக்களால் அவரைப் போற்றி ஆர்ப்பரிப்போம். **-பல்லவி**

வாருங்கள் தாள்பணிந்து அவரைத் தொழுவோம் நம்மை உருவாக்கிய ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம். அவரே நம் கடவுள் நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள் நாம் அவர் பேணிக்காக்கும் ஆடுகள். **-பல்லவி**

இன்று நீங்கள் அவரது குரலுக்குச் செவிகொடுத்தால் எத்துணை நலம்! அன்று மெரிபாவிலும், பாலை நிலத்தில் மாசாவிலும் செய்ததுபோல், உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். அங்கே உங்கள் மூதாதையர் என்னைச் சோதித்தனர் என் செயல்களைக் கண்டிருந்தும் என்னைச் சோதித்துப் பார்த்தனர். **-பல்லவி**

## இரண்டாம் வாசகம்

நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.

தூய பவுல் உரோமையருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 5:1-2, 5-8

ஆகையால் நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகியுள்ள நாம், நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வழியாய்க் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம். நாம் இப்போது அருள்நிலையைப் பெற்றிருக்கிறோம். இந்நிலையை அடையும் உரிமை இயேசு கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையால் தான் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்தது. கடவுளின் மாட்சியில் பங்குபெறுவோம் என்னும் எதிர்நோக்கில் நாம் பெருமகிழ்வும் கொள்ள முடிகிறது. அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது எனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது. நாம் இறைப்பற்று இன்றி வலுவற்று இருந்தபோதே, குறித்தகாலம் வந்ததும் கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். நேர்மையாளருக்காக ஒருவர் தம் உயிரைக் கொடுத்தலே அரிது. ஒருவேளை நல்லவர் ஒருவருக்காக யாரேனும் தம் உயிரைக் கொடுக்கத் துணியலாம். ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக் காட்டியுள்ளார்.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு**

**- இறைவா உமக்கு நன்றி**

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

ஆண்டவர் உண்மையிலே உலகின் மீட்பர் உயிருள்ள தண்ணீரை எனக்குக் கொடும் அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது.”

## நற்செய்தி வாசகம்

**தூய யோவான் எழுதிய நற்செய்தி 17:5-42**

அவர் சமாரியாவில் உள்ள சிக்கார் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார். யாக்கோபு தம் மகன் யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே அந்த ஊர் இருந்தது. அவ்வூரில் யாக்கோபின் கிணறும் இருந்தது. பயணத்தால் களைப்புற்றிருந்த இயேசு கிணற்று ஓரமாய் அமர்ந்தார். அப்போது ஏறக்குறைய நண்பகல். அவருடைய சீடர் உணவு வாங்குவதற்காக நகருக்குள் சென்றிருந்தனர். சமாரியப் பெண் ஒருவர் தண்ணீர் மொள்ள வந்தார். இயேசு அவரிடம், ”குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்” என்று கேட்டார். அச் சமாரியப் பெண் அவரிடம், ”நீர் யூதர் நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?” என்று கேட்டார். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை. இயேசு அவரைப் பார்த்து, ”கடவுளுடைய கொடை எது என்பதையும் ”குடிக்கத் தண்ணீர் கொடும்” எனக் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால் நீரே அவரிடம் கேட்டிருப்பீர் அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்” என்றார். அவர் இயேசுவிடம், ”ஐயா, தண்ணீர் மொள்ள உம்மிடம் ஒன்றுமில்லை கிணறும் ஆழமானது. அப்படியிருக்க வாழ்வு தரும் தண்ணீர் உமக்கு எங்கிருந்து கிடைக்கும்? எம் தந்தை யாக்கோபை விட நீர் பெரியவரோ? அவரே எங்களுக்கு இக்கிணற்றை வெட்டித் தந்தார். அவரும் அவருடைய மக்களும் கால்நடைகளும் இதிலிருந்துதான் தண்ணீர் குடிப்பது வழக்கம்” என்றார். இயேசு அவரைப் பாாத்து, ”இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்” என்றார். அப்பெண் அவரை நோக்கி, ”ஐயா, அத்தண்ணீரை எனக்குக் கொடும் அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது தண்ணீர் மொள்ள நான் இங்கு வரத்தேவையும் இருக்காது” என்றார். இயேசு அவரிடம், ”நீர் போய், உம் கணவரை இங்கே கூட்டிக் கொண்டு வாரும்” என்று கூறினார். அப்பெண் அவரைப் பார்த்து, ”எனக்குக் கணவர் இல்லையே” என்றார். இயேசு அவரிடம், ”எனக்குக் கணவர் இல்லை” என நீர் சொல்வது சரியே. உமக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள் என்றாலும் இப்போது உம்முடன் இருப்பவர் உம் கணவர் அல்ல. எனவே நீர் கூறியது உண்மையே” என்றார். அப்பெண் அவரிடம், ”ஐயா, நீர் ஓர் இறைவாக்கினர் எனக் கண்டுகொண்டேன். எங்கள் முன்னோர் இம்மலையில் வழிபட்டுவந்தனர். ஆனால் நீங்கள் எருசலேமில்தான் வழிபட வேண்டும் என்கிறீர்களே” என்றார். இயேசு அவரிடம், ”அம்மா, என்னை நம்பும். காலம் வருகிறது. அப்போது நீங்கள் தந்தையை இம்மலையிலோ

எருசலேமிலோ வழிபடமாட்டீர்கள். யாரை வழிபடுகிறீர்கள் எனத் தெரியாமல் நீங்கள் வழிபடுகிறீர்கள். ஆனால் நாங்கள் தெரிந்து வழிபடுகிறோம். யூதரிடமிருந்தே மீட்பு வருகிறது. காலம் வருகிறது் ஏன், வந்தேவிட்டது! அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபட வேண்டும்" என்றார். அப்பெண் அவரிடம், "கிறிஸ்து எனப்படும் மெசியா வருவார் என எனக்குத் தெரியும். அவர் வரும்போது அனைத்தையும் எங்களுக்கு அறிவிப்பார்" என்றார். இயேசு அவரிடம், "உம்மோடு பேசும் நானே அவர்" என்றார். அந்நேரத்தில் இயேசுவின் சீடர் திரும்பி வந்தனர். பெண் ஒருவரிடம் அவர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர். எனினும் "என்ன செய்ய வேண்டும்?" என்றோ, "அவரோடு என்ன பேசுகிறீர்?" என்றோ எவரும் கேட்கவில்லை. அப்பெண் தம் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் சென்று மக்களிடம், "நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து வாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ!" என்றார். அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு இயேசுவிடம் வந்தார்கள். அதற்கிடையில் சீடர், "ரபி, உண்ணும்" என்று வேண்டினர். இயேசு அவர்களிடம், "நான் உண்பதற்குரிய உணவு ஒன்று உண்டு. அது உங்களுக்குத் தெரியாது" என்றார். "யாராவது அவருக்கு உணவு கொடுத்திருப்பார்களோ" என்று சீடர்கள் தங்களிடையே பேசிக்கொண்டார்கள். இயேசு அவர்களிடம், "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு. "நான்கு மாதங்களுக்குப் பின்தான் அறுவடை" என்னும் கூற்று உங்களிடையே உண்டே! நிமிர்ந்து வயல்வெளிகளைப் பாருங்கள். பயிர் முற்றி அறுவடைக்குத் தயாராய் உள்ளது. அறுப்பவர் கூலி பெறுகிறார் நிலைவாழ்வு பெறுவதற்காக மக்களைக் கூட்டிச் சேர்க்கிறார். இவ்வாறு விதைப்பவரும் அறுப்பவரும் ஒருமிக்க மகிழ்ச்சியடைகின்றனர். நீங்கள் உழைத்துப் பயிரிடாததை அறுவடை செய்ய நான் உங்களை அனுப்பினேன். மற்றவர்கள் உழைத்தார்கள் ஆனால் நீங்கள் அந்த உழைப்பின் பயனை அடைந்தீர்கள். இவ்வாறு "விதைப்பவர் ஒருவர் அறுவடை செய்பவர் வேறு ஒருவர்" என்னும் கூற்று உண்மையாயிற்று" என்றார். "நான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார்" என்று சான்று பகர்ந்த பெண்ணின் வார்த்தையை முன்னிட்டு அவ்வூரிலுள்ள சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர். சமாரியர் அவரிடம் வந்தபோது அவரைத் தங்களோடு தங்குமாறு கேட்டுக்கொண்டனர். அவரும் அங்கு இரண்டு நாள் தங்கினார். அவரது வார்த்தையை முன்னிட்டு இன்னும் பலர் அவரை நம்பினர். அவர்கள் அப்பெண்ணிடம், "இப்போது உன் பேச்சைக் கேட்டு நாங்கள் நம்பவில்லை நாங்களே அவர் பேச்சைக் கேட்டோம். அவர் உண்மையிலே உலகின் மீட்பர் என அறிந்து கொண்டோம்" என்றார்கள்.

**- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**

**- கிறிஸ்துவே உமக்கு புகழ்.**

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்புத் தந்தையே இறைவா!**

பொருளாதாரத் தேவைகளும், நெருக்கடிகளும் பெருகி வரும் இந்தக் காலங்களில் ஆன்மீக வாழ்வின் தேடல்களை, தேவைகளை திருச்சபையில் நிறைவு செய்ய, எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவு நிலையினர் அனைவருக்கும் ஆற்றலும், ஞானமும் துய ஆவியின் விழிகாட்டுதலும் நல்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நான் உன்னை மறக்கவே மாட்டேன் என்ற தந்தையே!**

உம் திருமகனின் குரலுக்கு நாங்கள் செவிசாய்த்து, அவரது வழியில் நடந்திடவும், குடிப்பழக்கம், போதைப்பொருள் நுகர்வு, சிற்றின்ப நாட்டங்கள் இவை மனித மாண்பைச் சிதைக்கின்றன என்பதை உணர்ந்து இளைஞர்கள் நற்செய்தியின் வழி வாழ்ந்து மாண்புற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவர்கள் இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பின் நாள் என்னும் இறைவெளிப்பாட்டை தம் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து: இக்காலத்தை உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும் உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விடுதலையின் தெய்வமே இறைவா!**

எங்கள் குடும்பங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளிடையே உண்மையான பாசமும், பற்றுதலும் வளர்ந்திடவும், ஒருவர் ஒருவரைப் புரிந்து, ஏற்றுக்கொண்டு வளரவும், வாழவும், விசுவாசப் பாதையில் எங்களை வழி நடாத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எமக்கு ஆதரவளிக்கும் இறைவா!**

கடின நோய்களினால் பாதிக்கப்பட்டு வீடுகளிலும், மருத்துவ மனைகளிலிருந்தும் வேதனைப்படும் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம். மக்களை வாட்டி வதைக்கும் எல்லா நோய்களும் அகன்று, அவர்கள் சுகமடையவும், அவர்களுடைய வேதனைகளைத் தணித்தருளவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

தொலைத் தொடர்பு ஊடகங்கள், தவறான விளம்பரங்கள், பண்பாட்டுச் சிதைவுகள் இவற்றின் மத்தியில் எங்கள் இளைஞர்கள், இளம் பெண்கள் பாவச் சோதனைகளுக்கு உடன்படாமல் உமது வார்த்தையின் வழிநடந்து வெற்றி வாழ்வைக் கண்டிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைககைக் கொண்டுள்ள தந்தையே இறைவா!**

நாங்கள் ஒவ்வொரும் இத் தவக்காலத்தில் எம் கிறிஸ்தவ வாழ்வின் தன்மையை உணர்ந்து எந்நாளும் நிலைத்திருக்கும் உமது நெறிமுறைகளின் பொருளை சரியான முறையிலே விளங்கிக் கொண்டு, அவற்றைச் சரியாகக் கடைப்பிடித்து வாழும் வரத்தை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இன்றைய சிந்தனை

"குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்"

தண்ணீர் இன்று பெரிய பிரச்சனை. வீராணம் திட்டம், கூட்டுக் குடி நீர் திட்டம் என்றெல்லாம் தண்ணீர் பிரச்சனை நீழ்கிறது. என்ன திருப்பலிக்கு லேட் என்று கேட்டால், பெண்களின் பதில், "தண்ணீர் வந்தது அல்லவா" என்பது. ஒரு லிட்டர் பால் விலை ரூயஅிபாய் 12. இருந்தாலும் 13 ரூயஅிபாய் கொடுத்து ஒரு லிட்டர் மினரல் வாட்டர் வாங்கத் தயார்.தண்ணீர் தாகத்தின் அவசியம், அவசரம்.

நம் சார்பில் அந்த சமாரியப் பெண் வெளிப்படுத்தும் சில தாகங்கள் இவைகள்:

"நீர் யூதர் நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?" (யோவா 4:9) ஏற்றத்தாழ்வு என்ற தாகம், உயர்ந்தவள் தாழ்ந்தவள் என்ற தாகம், அருள் பெற்றவள் பெறாதவள் என்ற தாகம். - பெண் என்ற தாழ்வு மனப்பான்மைத் தாகம். ஆண் என்ற ஆதிக்க வெறியின் தாகம்.

- "எனக்குக் கணவர் இல்லையே" (யோவா 4:17) தனக்குக் குடும்பம் இல்லை என்ற தாகம். முறையான குடும்ப வாழ்க்கை இல்லையே என்ற தாகம்.அறநெறி கூறும் வாழ்க்கை வாழ முடியவில்லையே என்ற தாகம்.
- "எம் தந்தை யாக்கோபை விட நீர் பெரியவரோ?" (யோவா 4:12) சம்பிரதாயம், பாரம்பரியம், மூதாதையர் பரம்பரை என்ற தாகம்.
- "எங்கள் முன்னோர் இம்மலையில் வழிபட்டுவந்தனர். ஆனால் நீங்கள் எருசலேமில்தான் வழிபட வேண்டும் என்கிறீர்களே" (யோவா 4:20) ஆன்மீக தாகம். உண்மை இறைவனை வணங்கி வழிபட வேட்கை. வழிபட முடியாத தாகம். எல்லா தாகங்களையும் தணித்து நிறைவான வாழ்வைத் தரும் நம் தேவன் இயேசு ஒருவரே.

”நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்”(யோவா4:14) எதைக்கொடுத்தாயினும், எதை இழந்தாயினும், என்ன முயற்சி செய்தாயினும், என்ன விலை கொடுத்தாயினும் அத்தண்ணீரை வாங்கிப் பருகுவோம்.இனிது வாழ்வோம். வாழ்த்துக்கள்.

## மன்றாட்டு:

இறைவா, உம் திருமகனை நாளும் அதிகமாக அறிந்திட எங்கள் உள்ளத்தை ஒளிர்வித்தருளும்.

## தியானிப்போம்

தவக்காலம் என்பது நமது உள்ளக்குகைக்குள் செல்ல வேண்டிய காலம். அவரது அன்பையும் உண்மையையும் சுவைக்கத் தனிமையில் அன்பரோடு இருக்கும் காலம். இது நம்மைப் பரிசுத்த பாதையில் நடப்பதற்கு அறைகூவல் விடுக்கிறது.

நாம் தூய மனமுள்ளவர்களாக வாழ, கடவுள் என்ன விரும்புகிறாரோ அதை மட்டும் செய்ய வேண்டும். அதாவது, தவம், செபம், தர்மம் செய்ய வேண்டும். சமாரியப் பெண்ணின் மீட்புக்கு இயேசு பசியாக இருந்தது போல, அவள் உண்மைக்கு சாட்சி பகரப் பசியாக இருந்தது போல, கடவுளைச் சந்திக்கவும், செபிக்கவும், பிறர் மீட்படையப் பசியாக இருக்கவும், அதற்காக தர்மம் செய்யவும் வேண்டும்.

சமாரியப் பெண் இறை இயேசுவின் பிரசன்னத்தைத் தேடத் தகுதி உடையவளல்ல என நினைத்திருந்தாலும், அதை உணர்ந்தாள். அவரைப் பற்றிச் சாட்சியம் பகரத் தாமாகவே முன்செல்கிறாள். திருமுழுக்கின் போது நாம் அனைவரும் இறைவனின் கொடையைப் பெற்றுக் கொண்டோம். நாம் சந்திக்கும் மக்களிடையே அதன் தூதர்களாகச் செல்ல அழைக்கப்படுகிறோம்.

உள்ளக்குகைக்குளுள்ள நம் ஆன்மா இறைவனால் முத்தமிடப்படுகிறது. ஆன்ம தாகத்தால் அருளும் ஆசீரும் நிரம்பி வழிகிறது. இதுதான் ஒருவரை கடவுளுக்கு முழுமையாகத் தன்னைக் கையளிக்க உதவுகிறது. புனித ஹில்டாஹார்டு.

புனித வாழ்வு கடவுளின் திருவுளத்திற்குப் பணிந்த வாழ்வு. புனித தெரசா லிசியக்ஸ்

தாழ்ச்சியின் வழியாகத் தான் கடவுளை அறிய முடியும். கடவுளது அன்பில் உயர வளர ஒரே வழி தாழ்ச்சி. புனித பிரான்சிஸ் அசிசி.

# சிந்திப்போம்

## அன்பியங்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குழுவினரோடு பகிர்ந்து கொள்வோம்.

தவக்காலம் என்பது தந்தையின் அன்பை வாழ்வாக்குவது. இறைவனோடு நாம் கொண்டுள்ள உண்மையான உறவு நம்மை நற்செய்திப் பணிக்கு அழைக்கிறது. கடந்த ஆண்டில் இறைவன் நமக்களித்த இலவசக் கொடையான அன்பைப் பற்றி பேசுவோம். நாம் அன்புள்ள, பரிவுள்ள, ஈகைக்குணமுள்ள இறைவனின் மக்களாக வாழ்கிறோமா என்பதைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.

## ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குழுவினரோடு பகிர்ந்து கொள்வோம்.

தவக்காலம் பரலோகப் பிதாவின் அன்பைப் பருகும் காலம். கடவுள் நமக்குச் செய்த அனைத்து நன்மைகளையும் நினைவுகூறும் காலம். இதைப் பற்றி பிறரோடு பேசும் போது எந்தெந்த வகையில் நமது அன்பை, நேரத்தை, பொருளை மற்றவரின் தேவைக்காகப் பகிர்ந்து கொண்டோம் என்பது பற்றிச் சிந்திக்கவும்.

## குடும்பத்தினருக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குடும்பத்தினரோடு பகிர்ந்து கொள்வோம்.

வாழ்வின் தீய பழக்கங்களில் இருந்து மாற குடும்பம் எதிர்கொள்ளும் சவால்கள் என்னென்ன? புனித வாழ்வு வாழ குடும்பத்தில் நீ எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் ஒரு பகுதியைப் பற்றிக் கலந்துரையாடுவோம். குடும்பமாக நாம் எவ்வாறு புனித வாழ்வுக்கு மாறலாமெனப் பேசிச் செபிக்கவும்

விவாதித்த பின்னர், மனமாற்றமடையத் தைரியமும் விடாமுயற்சியும் நாம் பெற ஒரு செபத்தைத் தயார் செய்து, குடும்பத்தினரில் ஒருவரைச் செபிக்கச் செல்லவும். குடும்ப வாழ்வின் சவால்களை எதிர்த்துப் போராடத் தேவையான வல்லமையை இறைவன் நமக்களிக்குமாறு மன்றாடுவோம்.

### தனிநபருக்காக:

நீ வாசித்த இறைவார்த்தைகளில் உன் மனதைத் தொட்டவைகளைப் பற்றிச் சற்று நேரம் சிந்தித்துப் பார். இந்த இறைவார்த்தைகளைப் வேறு ஒருவருடன் பகிர விரும்பினால் எதைப் பகிர்ந்து கொள்வாய்?

அன்பும் உண்மையுமான இறைவனைச் சந்திக்கவும், கடவுள் உண்மையான உருவைத் தழுவவும், எதற்காக நான் அழைக்கப்பட்டேன் என்பதை உணரவும் தயாராக இருக்கிறேனா? என் பாராபட்ச நிலை, சார்பு நிலை, கருத்து வேறுபாடுகள், இவற்றை ஏற்றுக் கொண்டு கடவுள் காட்டும் வழியில் சென்று என்னைப் புனிதப்படுத்த நான் தயாரா?

உயிர்ப்பு விழாவின் உண்மைப் பொருளைப் புரிந்து கொண்டு, பரலோகத் தந்தையின் அன்பைப் பருக நீ எந்த நபரைத் தேர்ந்தெடுத்து, அவரோடு இத்தவக்காலத்தில் பயணம் செய்யப் போகிறாய் எனச் சிந்திக்கவும்.

## நம் வாழ்விற்காக

அன்போடு அன்பைப் பகிர்வது நம் வாழ்வையே அளிப்பதற்குச் சமம். அது நம் இதயத்தைப் புதுப்பித்து விரிவடையச் செய்கிறது. பிறருக்காக நம் அன்பைப் பகிர்வது நம் தந்தையாகிய கடவுளோடு கொண்டுள்ள அன்பை மேலும் ஆழப்படுத்துகிறது. பலன் நோக்கா அன்பை அளிப்பதால் நம் வாழ்வு மாற்றமடைகிறது.

## நற்செயல் புரிவோம்

### ஆலயப் பணிக்குழுக்கள்:
உன் வாழ்வில் கடவுளின் அருளை எவ்வழிகளில் அடைந்துள்ளாய் எனவும், நீ தேர்ந்தெடுத்த அந்த நபரினால் உன் வாழ்வில் ஏற்பட்ட நன்மைகளைப் பற்றியும் அவரிடம் பேசவும்.

### குடும்பத்தினர்:
நீ உன் குடும்பத்தை நன்றியுடன் உணர்ந்து, தந்தையாகிய கடவுளின் அருள் உன் குடும்பத்தில் ஊடுருவுவதைப் பற்றி அதே உறவினருடன் பகிரவும்.

### தனிநபர்:
நீ உன் வாழ்வில் எவ்விதங்களில் கடவுளை நன்றியுணர்வுடன் காண்கிறாய் என உன்னைப் புரிந்துகொள்ளும் நண்பருக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## நிறைவு செபம்

ஆவியாரின் உந்துதலால் ஒருவர் செபத்தைச் சொல்லிப் பாடலுடன் முடிக்கவும்.